OS: 180/2020

Date: 11.01.2023

பெயர் : ஜெகநாதன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை – பிரதிவாதிகள் தரப்பில்</u>**

இந்த வழக்கு யார் யார் மீது போடப்பட்டுள்ளது என்றால் சமயா , பழனிசாமி, சின்னபொன்னு, மகேந்திரன் மீது வழக்கு போட்டுள்ளேன் . தாவாவில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நான் கடந்த 60 ஆண்டுகளாக சொத்தை ஓட்டி வருவதால் சொத்துக்கள் என்னுடையது என பரிகாரம் கேட்டுள்ளேன் . நான் எனது தாத்தா முனியப்பகவுண்டர் இருந்த காலத்தில் இருந்து தாவா சொத்தினை ஓட்டி வருவதாலும் , முனியப்பகவுண்டரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கேட்கிறேன் . இவ்வழக்கில் முனியப்பகவுண்டரின் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை .

முனியப்பகவுண்டருக்கு சின்னப்பன் , ரத்தினம், மாணிக்கம், நயனாகவுண்டர், பழனியப்பன், சின்னாகவுண்டர் என்ற 6 மகன்கள் என்றால் சரிதான். இதில் சின்னப்பனுக்கு 2 மகன்கள், அதில் ஒருவர் பெயர் ஜெகநாதன் மற்றவர் பெயர் கவுண்டப்பகவுண்டர் . ஜெகநாதன் என்பது நான்தான் , நான் இவ்வழக்கில் 7ம் வாதியாக உள்ளேன். எனது சகோதரர் கவுண்டப்பகவுண்டர் இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் எனது சகோதரரர் கவுண்டப்பகவுண்டரை ஏன் கட்சி சேர்க்கவில்லை என எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் விளக்கம் சொல்லவில்லை , இனிமேல்தான் சொல்வேன்.

ரத்தினத்திற்கு 3 மகன்கள், அவர்கள் முனியகவுண்டர் , கந்தசாமி, பழனிமலை. ரத்தினத்தின் வாரிசுகளை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை . மாணிக்கத்திற்கு ஒரு மகள் அவர் பெயர் வெள்ளையம்மாள் . மாணிக்கம் இறந்து 10 ஆண்டுகள் ஆகிறது . மாணிக்கத்தின் மனைவி இறந்துவிட்டார் . அவரை

கட்சி சேர்க்கவில்லை. மகள்தான் 5ம் வாதி வெள்ளையம்மாள் ஆவார். எனது வழக்குரையில் 5ம் வாதியை வள்ளியம்மாள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அவர் பெயர் வெள்ளையம்மாள். நயனாகவுண்டருக்கு 3 பேர் வாரிசு, ஒருவர் மணிமுத்து, முனியன், பழனிசாமி ஆவார்கள்.

இதில் முனியன் மட்டுமே வழக்கில் 3ம் வாதியாக சேர்த்துள்ளேன், மற்ற இருவரான மணிமுத்தும், பழனிசாமியும் கட்சி சேர்க்கவில்லை என்றால் மணிமுத்து 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். மணிமுத்துவின் வாரிசுகளை இவ்வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முனியகவுண்டர் மகன் பழனியப்பனுக்கு வேலுசாமி, ராஜேந்திரன் என்ற இரு மகன்கள். இதில் ராஜேந்திரனையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். சின்னாகவுண்டருக்கு ஒரு மகள் உள்ளார், அவர் பெயர் குப்பாயி. தாவாவில் 6ம் வாதியாக குப்பாயி உள்ளார். தாவாவில் பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரிந்துகொண்டேன்.

பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் முனியகவுண்டரின் அனைத்து வாரிசுகளையும் கட்சி சேர்க்காமல் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என சொல்லியுள்ளார்கள் அந்த விவரத்தை நான் தெரிந்துகொண்டேன். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் முனியகவுண்டரின் அனைத்து வாரிசுகளையும் கட்சி சேர்ககவில்லை என்பதால் இந்த தாவா எவ்வகையில் பாதிக்கப்படவில்லை விவரம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முனியகவுண்டரின் அனைத்து வாரிசுகளையும் கட்சி சேர்க்கவில்லை என்பதால் இந்த தாவாவிற்கு அவசிய தரப்பினராக அனைவரையும் சேர்க்காததால் இந்த தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் நாகப்பன் மகள்களுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஒப்புக்கொண்டு அதன்படி வழக்கு நடத்துகிறேனா என்றால் ஆம், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின்படிதான்

வழக்கு நடத்துகிறேன் . மேறப்டி வா .சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் ஏற்பட்ட தேதியில் நாகப்பன் அவரது மகள்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறுதான் உள்ளது , ஆனால் சுவாதீனம் எங்களிடம்தான் இருந்தது . செட்டில்மெண்ட் தேதியில் சுவாதீனம் எங்களிடம் உள்ளதாக வழக்கு நடத்துகிறேனா என்றால் அதன்படிதான் வழக்கு நடத்துகிறேன். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் மகேந்திரன் காட்டிற்கு வந்தபின்புதான் எனக்கு தெரிந்தது.

எனக்கு நாகப்பன் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி 4 ம் பிரதிவாதி மகேந்திரன் கிரயம் பெற்ற பிறகுதான் தெரிய வந்தது என்று நான் கூறும் விவரத்தை வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . வழக்கு போடுவதற்கு வழக்குரை ஆவணங்கள் யார் வழக்கறிஞரிடம் கொடுத்தார்கள் என்றால் நான்தான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் . வழக்குரையில் 1வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்ட நாகப்பன் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் பதிவு நகல் 18.12.1982 தேதியில் பெறப்பட்டது என்றால் சரிதான் . அதனால் நாகப்பன் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எனக்கு 2020 ம் ஆண்டுதான் தெரியும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.2 சமயா பெயரில் உள்ள கிரய பத்திரம் 14.12.2018 தேதியில் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மகேந்திரன் பெயரில் உள்ள கிரய பத்திரத்தில் நாகப்பன் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி குறிப்புகள் இல்லை என்றால் சரிதான் . மகேந்திரன் கிரய ஆவணத்தில் செட்டில்மெண்ட் பற்றி குறிப்பிடப்படாத நிலையில் எனக்கு எப்படி செட்டில்மெண்ட் பற்றி தெரிய வந்தது என்றால் நான் நகல் போட்டு பார்த்து தெரிந்துகொண்டேன். ஏற்கனவே இருந்த 1982 ம் வருட நகலை பார்த்து

மீண்டும் நகல் போட்டு தெரிந்துகொண்டேன் . சமயா பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் நகல் 2018ம் ஆண்டே பெற்று ஏன் 2020ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சுவாதீனம் எங்களிடம் இருந்ததால் யாரும் வரமாட்டார்கள் என்பதால் வழக்கு போடவில்லை , மகேந்திரன் வந்ததால்தான் வழக்கு போட்டோம்.

சமயா பெயரில் உள்ள கிரய பத்திரம் பற்றி எனக்கு எப்படி தெரிய வந்தது என்றால் மணிமுத்துவின் மகன் சொல்லி தெரிய வந்தது . நான் நகல் வாங்கிய பிறகு சமயாவிற்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை , மணிமுத்துவின் மகன் கொடுத்தார் . அந்த அறிவிப்பை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. சமயா பெயரில் பட்டா மாறிய விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் மகேந்திரன் வந்த பின்புதான் எனக்கு தெரிந்தது . வருவாய் அதிகாரிகளுக்கு சமயா பெயரில் பட்டா மாறுதல் செய்யக்கூடாது சுவாதீனம் எங்களிடம் தான் உள்ளது என அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

தாவா சொத்திற்கு பட்டா குப்பாயி பெயரில்தான் உள்ளது என எனக்கு எப்போது தெரியும் என்றால் மகேந்திரன் வந்த பின்புதான் எனக்கு தெரியும்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/**DW5**

ஒப்பம்/சார்பு நீதிமன்றம் நீதிபதி, ஓமலூர்